**<u>கூடுதல் சார்பு அமர்வு நீதிமன்றம், ஒசூர்</u>**

முன்னிலை திரு. எம். ஜெயமணி, பி,ஏ., பி.எல்.,

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி, ஒசூர்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.202/2022</u>**

**CNR.No.TNKI050015732022**

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக : காவல் ஆய்வாளர்,<br>சூளகிரி காவல் நிலையம்,<br>குற்ற எண்.59/2020 |
| எதிரி | கார்த்திக், (23/2020), த/பெ. லட்சுமணன்,<br>ஆருப்பள்ளி கிராமம், செம்பரசணப்பள்ளி அஞ்சல்,<br>சூளகிரி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம். |
| குற்றம் | இ.த.ச.294 (b), 341, 307 பிரிவுகளின்கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | இ.த.ச.294 (b), 341, 307 பிரிவுகளின்கீழ் |
| தீர்மான தேதி | 12.03.2026 |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | 12.0.3.2026 |

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | எதிரியின் பெயர் | தகப்பனார் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | சூளகிரி காவல் நிலையம், குற்ற எண். 59/2020 | கார்த்திக் | லட்சுமணன் | டிரைவர் | சூளகிரி | 23/2020 |

| சம்பவம் நிகழ்ந்த நாள் | புகார் கொடுத்த நாள் | இறுதி அறிக்கை தாக்கல் நாள் | எதிரி காவல் படுத்தப்பட்ட நாள் | எதிரி பிணையில் சென்ற நாள் |
|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 |
| 11.02.2020 | 12.02.2020 | 15.12.2020 | 13.02.2020 | 04.03.2020 |

| முதல்நிலை விசாரணை நாள் | கு.வி.மு.ச. 228 பிரிவின்கீழ் எதிரி விசாரணை செய்யப்பட்ட நாள் | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | விசாரணை முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 13 | 14 | 15 | 16 |
| 20.09.2022 | 20.11.2023 | 24.01.2024 | 27.10.2025 |

| U/s. 355(1)(b)ன் கீழ் எதிரி விசாரணை செய்யப்பட்ட நாள் | தீர்ப்பு நாள் | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | காலதாமதத்திற்கான விளக்கம் |
|---|---|---|---|
| 17 | 18 | 19 | 20 |
| 29.10.2025 | 12.03.2026 | --- | --- |

| பல்வகை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் உத்தரவு நாள் (மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்) (கு.வி.மு.ச.317 பிரிவின் கீழான மனுக்களைத் தவிர்த்து | விசாரணையின்போது எதிரி தலைமறைவாகி யிருந்தால், மேற்படி எதிரி ஆஜரான/ஆஜர்ப்படுத்தப் பட்ட விபரங்கள் | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு |
|---|---|---|
| 21 | 22 | 23 |
| இல்லை | இல்லை | இல்லை |

இவ்வழக்கானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 13.11.2025 அன்று வந்தபோது அரசு தரப்பில் வழக்கறிஞர் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. S. சௌந்தரி அவர்கள் ஆஜரான நிலையிலும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. பாலகிருஷ்ணா அவர்கள் ஆஜரான நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 08.00 மணிக்கு, சூளகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆறுப்பள்ளியிலிருந்து கோனதிம்மனப்பள்ளி ரோட்டில், சாட்சி சுப்பிரமணி வீட்டிற்கு அருகில், எதிரி கார்த்திக், அ.சா.1 சீனிவாசனை கொலை செய்யும்

நோக்கத்கோடு சீனிவாசன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை வழிமறித்து, "தேவடியா மகனே" திட்டி வீச்சருவாளால் "இத்தோடு ஒழிந்து போடா" என்று சொல்லி கழுத்தின் பின்பகுதியில் வெட்டி கீழே விழுந்ததில் அ.சா1க்கு பின்கழுத்திலும், கால் முட்டியிலும் காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 294 (b), 341, 307–ன் பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக சூளகிரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. ஒசூர் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களால் இவ்வழக்கின் கோப்புகள் ஆராயப்பட்டு, முதல் விசாரணை வழக்கு எண்.15/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜராக உத்தரவிடப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், எதிரிக்கு வழக்கு நகல்கள் வழங்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக கு.வி.மு.ச.209(அ) பிரிவின்கீழ் கிருஷ்ணகிரி முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, முதன்மை அமர்வு நீதிபதி அவர்கள் இவ்வழக்கின் கோப்பினை அமர்வு வழக்கு எண்.202/2022 ஆக கோப்பிற்கு எடுத்து இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

**3.** இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதுரைகளையும் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முதல் தோற்ற ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது இ.த.ச. 294 (b), 341, 307 பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி கூறப்பட்டபோது, இவ்வழக்கு எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எதிரி வழக்கு விசாரணையினை எதிர்கொள்ள வேண்டியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.16 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் அருவாள் அ.சா.பொ.1 ஆகவும், Hero Splendor TN–70–R–0200 இரு சக்கர வாகனம் அ.சா.பொ.2 ஆகவும் அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>

i) அ.சா.1 சீனிவாசன் தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020–ம் தேதி இரவு 08.00 மணிக்கு தான் வேலையை முடித்துவிட்டு தன்னுடைய வீட்டிற்கு ஆருப்பள்ளியை தாண்டி பைக்கில் வந்தபோது, தனக்கு பின்னால் எதிரி கார்த்திக்கும், மாஸ்க் அணிந்த மற்றொருவரும் பல்சர் வண்டியில் வந்ததாகவும், மாஸ்க் அணிந்திருந்தவர் தான் அந்த பல்சர் வண்டியை ஓட்டி வந்ததாகவும், அவர் பின்னால் எதிரி கார்த்திக் அமர்ந்து வந்ததாகவும், அவர்கள் இருவரும் தனக்கு முன்னால் குறுக்காக வந்து தன்னை வழி மறித்து கெட்ட வார்த்தையால் திட்டி, இத்தனை நாள் தப்பித்து விட்டாய் இப்போது தங்களிடம் மாட்டிக்கொண்டாய் என்று கூறி பின்னால் மறைத்து வைத்திருந்த வீச்சரிவாளால் இத்தோடு தொலைந்து போ என்று கூறி தன்னுடைய பின் கழுத்தில் வெட்டிவிட்டதாகவும், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தான் கீழே விழுந்ததால் காலில் அடிபட்டதாகவும், தான் சத்தம் போட்டபோது அருகிலிருந்த சுப்பிரமணி என்பவரது வீட்டிற்கு ஓடியதாகவும், தன்னுடைய தம்பி செல்வத்திற்க்கும், எதிரியின் அண்ணன் சின்னதம்பிக்கும் மற்றும் சிலருக்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை இருந்ததாகவும், அதன் காரணமாக எதிரியின் அண்ணன் கொலையாகிவிட்டதாகவும், அந்த பிரச்சனை காரணமாக தன்னுடைய தம்பி ஜெயிலுக்கு போய்விட்டதாகவும், அதனால் எதிரி தன்னுடைய வீட்டில் உள்ள நபர்கள் யாரையாவது கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கூறியிருந்ததாகவும், கார்த்திக் தன்னை வெட்டிய பிறகு தான் அந்த வீட்டை நோக்கி ஓடி அங்கிருந்தவர்களிடம் கார்த்திக் தன்னை வெட்டியதாக கூறியதாகவும், கழுத்தில் இரத்தம் வராமல் தடுப்பதற்காக ஒரு துணியை கொடுத்ததாகவும், அதன் பிறகு கார்த்திக் தன்னை வெட்டிவிட்டதாக தன்னுடைய நண்பர் முரளி என்பவருக்கு மொபைல் போன் மூலம் தகவல் கொடுத்ததாகவும், அவர் கார் எடுத்து வந்து தன்னை சூளகிரியில் உள்ள விஜயா மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அங்கு முதலுதவி சிகிச்சை பெற்ற பிறகு தன்னை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அங்கும் முதலுதவி பெற்றுக்கொண்ட பிறகு தான் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனையில் சேர்ந்ததாகவும், அதன் பிறகு காலையில் போலீசார் வந்து தன்னை

விசாரித்து, தன்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுகொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1,** தன்னிடம் காட்டப்படும் அரிவாளால் தான் கார்த்தக் தன்னை வெட்டியதாகவும் அந்த **அரிவாள் சா.பொ.1** என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 கேசவமூர்த்தி தனது முதல் விசாரணையில், அ.சா.1 சீனிவாசன் தனது நண்பர் எனவும், தானும், தனது நண்பர் சீனிவாசனும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் எனவும், எதிரியை தனக்கு தெரியும், அவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர்தான் எனவும், கடந்த 2020 –ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் இரவு 09.30 மணிக்கு தான் பக்கத்து ஊருக்கு சென்று வீட்டிற்கு வந்தபோது தனது அம்மாவும், சித்தியும், தனது நண்பர் சீனிவாசனுக்கு அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக தெரிவித்ததாகவும், அதை தெரிந்து கொண்ட தான் ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு சென்று தனது நண்பர் சீனிவாசனை பார்த்ததாகவும், சீனிவாசனுக்கு பின்பக்க கழுத்தில் வெட்டுகாயம் இருந்ததாகவும், அதற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் எனவும், 5 நாட்கள் அவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், தான் 2 நாட்கள் அவருடன் தங்கி அவருக்கு உதவியாக இருந்ததாகவும், அ.சா.1க்கு எப்படி பின்பக்க கழுத்தில் வெட்டுகாயம் ஏற்பட்டது என்று அவரிடம் கேட்டபோது சூளகிரியில் இருந்து இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, பெத்தன்னா என்பவரது வீட்டிற்கு முன்புறம் சென்று கொண்டிருந்தபோது கார்த்திக் மற்றும் பால்ராஜ் வெட்டியதாக தன்னிடம் கூறியதாகவும், சூளகிரி காவல் நிலைய ஆய்வாளர் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து கார்த்திக் மற்றும் பால்ராஜ் ஆகியோரின் முகவரி மற்றும் போன் நம்பர் கேட்டார் எனவும், அந்த கார்த்திக் தான் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரி என்றும், தற்போது தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்பதாக **பிறழ்சாட்சியாக** சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.3 சுப்ரமணி தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020ம் தேதி சீனிவாசன் என்பவர் அடிபட்டு கட்டிக்கொண்டு தனது வீட்டருகே வந்ததாகவும், தான் வீட்டினுள் தூங்கி கொண்டிருந்து சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்ததாகவும், தன் மனைவி

மாசமாக இருந்தார் எனவும், அவர் தன்னுடைய உடலில் துண்டு போட்டிருந்ததாகவும், அந்த துண்டை சீனிவாசன் கேட்டதால் தனது மனைவி கொடுத்ததாகவும், தன் அம்மா அவருக்கு தண்ணீர் கொடுத்ததாகவும், தண்ணீரை குடித்துவிட்டு சீனிவாசன் அவருடைய ஊருக்கு சென்றுவிட்டதாகவும், அவ்வளவுதான் நடந்தது, போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்பதாக **பிறழ்சாட்சியாக** சாட்சியமளித்துள்ளார்.

iv) அ.சா.4 முரளி தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 08.30 மணிக்கு தான் தன் வீட்டில் இருந்தபோது சீனிவாசன் தனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு கார்த்தி என்பவர் தன்னை வெட்டிவிட்டதாக அழுதுகொண்டே தன்னிடம் சொன்னதாகவும், தான் தனது காரை எடுத்துக்கொண்டு போய் அவரை விஜயா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், தான் பார்க்கும்போது சீனிவாசனுக்கு பின் கழுத்தில் வெட்டுகாயம் இருந்ததாகவும், இரத்தம் வழிந்து துண்டால் கட்டப்பட்டிருந்ததாகவும், அவரை மருத்துவமனையில் சேர்த்த பின்பு சீனிவாசனின் அக்காவிற்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும், பின்பு அவரது அக்கா வந்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அங்கிருந்து சீனிவாசனை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்ததாகவும், காயம் அதிகமாக இருந்ததால் குணம் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாக சாட்சியமளித்துள்ளார்.

v) அ.சா.5 கோவிந்தராஜ் தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 10.00 மணிக்கு தான் தன் வீட்டில் இருந்தபோது சீனிவாசனின் அப்பா கோவிந்தராஜ் தனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு சீனிவாசனை யாரோ வெட்டிவிட்டார்கள் என்றும், சென்றுபோய் பார்க்கும்படியும் தன்னிடம் சொன்னதாகவும், தான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது தான் போவதற்குள் சீனிவாசனை மருத்துவமனைக்கு முரளி என்பவர் கொண்டு சென்றுள்ளதாகவும், மறுநாள் காலையில் காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்ததாகவும், தான் உடன் இருந்ததாகவும், கேசவன் என்பவரும் உடனிருந்தார் எனவும், போலீசார் சம்பவயிடத்தை படம் வரைந்ததாகவும் அதற்கு இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், தற்போது தன்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான், அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

vi) அ.சா.6 கிருஷ்ணன் தனது முதல் விசாரணையில், எதிரியை தனக்கு தெரியும் எனவும், கடந்த 11.02.2020–ம் தேதி இரவு 07.30 முதல் 08.00 மணியளவில் எதிரி கார்த்திக், அ.சா.1 சீனிவாசனை வெட்டிவிட்டதாக கேள்விபட்டதாகவும், சின்னதம்பிக்கும், செல்வதத்திற்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்ததாகவும், செல்வம், சின்னதம்பியை வெட்டிவிட்டதாகவும், எதிரி செல்வதிற்கு மாமா என்றும் மேற்படி பிரச்சனை சம்பந்தமாக எதிரி குடும்பத்திற்கும், அ.சா.1ன் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாகவும், சம்பவம் நடந்து அதன் பின்பு 3 நாட்கள் கழித்து 13.02.2020–ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் தான் சூளகிரிக்கு வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது கும்பளம் ஜங்கசனில் சூளகிரி காவல் உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து விசாரித்து கொண்டிருந்ததாகவும், தன்னை காவல் உதவி ஆய்வாளர் அழைத்து விசாரித்ததாகவும், தன்னையும், எதிரி கார்த்திக்கையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று கார்த்திக்கை போலீசார் விசாரித்ததாகவும், அதன் பின்னிட்டு பகல் 12.00 மணி முதல் 2.00 மணி சுமாருக்கு தன் முன்னிலையில் எதிரி கார்த்தியின் Splendor இரு சக்கர வாசனத்தை போலீசார் கைப்பற்றியதாகவும், பின்பு எதிரி கார்த்திக் வீட்டின் பின்புறம் சென்று கத்தி ஒன்றை போலீசார் கைப்பற்றியதாகவும், அதற்கு தான் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், தன்னுடன் மற்றொருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான், அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3** எனவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான், Splendor இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அ.சாஆ.4** என்றும், கொடுவாள் கைப்பற்றபட்டதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5** என்றும், தற்போது நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1 கொடுவாளைத் தான் போலீசார் எதிரியின் வீட்டின் பின்புறம் இருந்து எடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

vii) அ.சா.7 பால்ராஜ் தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020ம் தேதி இரவு 08.40 மணிக்கு தான் கிருஷ்ணகிரியில் இருந்ததாகவும், சீனிவாசன் என்பவர் தன் மீதும், கார்த்தி என்பவர் மீதும் புகார் கொடுத்திருந்தார் எனவும், ஆனால் தான் கிருஷ்ணகிரியில்தான் இருந்ததாகவும், சீனிவாசன், தானும், கார்த்திக் என்பவரும் தான் சேர்ந்து வந்ததாகவும் சொல்லியுள்ளார், ஆனால் அது தவறு எனவும், தாங்கள் கிருஷ்ணகிரி சென்றதற்கு கட்டண சோதனை சாவடியில் இருந்த கேமராவில் பதிவாகி இருந்தது எனவும், இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்பதாக **பிறழ்சாட்சியாக** சாட்சியமளித்துள்ளார்.

viii) அ.சா.8 செல்வம் தனது முதல் விசாரணையில், கடந்த 12.02.2020 ம் தேதி காலையில் சீனிவாசன் என்பவர் கழுத்தில் வெட்டுப்பட்டு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் இருந்த விவரம் தெரிந்து அங்கு சென்று பார்த்ததாகவும், கார்த்திக் என்பவர் சீனிவாசனை வெட்டிவிட்டதாக சொன்னார்கள் எனவும், 11.02.2020–ம் தேதி இரவு 8.00 மணிக்கு பெத்தன்னா வீட்டருகே கார்த்திக் சீனிவாசனை வெட்டிவிட்டதாக சொன்னதாகவும், கார்த்திக்கின் அண்ணன் சின்னதம்பி என்பவர் இறந்துவிட்டார் அதற்கு காரணம் தாங்கள்தான் என்று நினைத்துக்கொண்டு தனது அண்ணன் சீனிவாசனை வெட்டிவிட்டார்கள் எனவும், போலீசார் தன்னை விசாரித்தபோது, தனது அண்ணன் சீனிவாசன் மேற்படி விவரங்களை தான் சொன்னதாகவும், தனது அண்ணனை மேல் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், முரளி என்பவர் தனது அண்ணன் சீனிவாசனை சிகிச்சைக்கு சேர்த்ததாக சொன்னார் என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

ix) அ.சா.9 சகாதேவன் தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020–ம் தேதி தானும், பால்ராஜும் கிருஷ்ணகிரி சென்றதாகவும், அங்கு நகை எடுத்துவிட்டு பின்னர் தன்னை பால்ராஜ் அழைத்து கொண்டு தன்னை வீட்டில் விட்டு சென்றுவிட்டதாகவும், வேறு எதுவும் தெரியாது எனவும், தானும், பால்ராஜும் ஒரே இடத்தில் வேலை செய்ததாகவும், தனக்கு வழக்கு விவரத்தை போலீசார் தான் சொன்னார்கள் எனவும்,

பால்ராஜ் ஏதோ ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு இருப்பதை தெரிந்து போலீசார் தன்னிடம் வந்து விசாரித்ததாகவும், அப்போது தானும், பால்ராஜிம் சென்ற நகை கடைக்கு சென்று ரசீதையும் பார்த்து விசாரித்தார்கள் எனவும், கட்டண சோதனை சாவடியிலும் விசாரித்தார்கள் என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

x) அ.சா.10 சக்திவேல் தனது முதல் விசாரணையில், 2016 ம் ஆண்டு சின்னதம்பி என்பவரை செல்வம் என்பவர் கொன்றுவிட்டதாகவும், முன்விரோதத்தின் காரணமாக 11.02.2020 ம் தேதி மாலை 08.00 மணிக்கு கார்த்திக் என்பவர் சீனிவாசன் என்பவரை கொலை செய்ய முயற்சி செய்தார் எனவும், இது சம்பந்தமாக சீனிவாசன் என்பவர் பால்ராஜ் மீது வழக்கை தாக்கல் செய்தார் எனவும், அந்த சமயம் தானும், பால்ராஜ் மற்றும் சகாதேவன் ஆகியோர்கள் கிருஷ்ணகிரி சென்று நகையை மீட்டு வந்ததாகவும், 2 நாட்கள் கழித்து 13.02.2020–ம் தேதி சூளகிரி காவல் ஆய்வாளர் தங்களை அழைத்து சென்று விசாரித்தார் எனவும், போலீசார் விசாரணையில் தாங்கள் சம்பவம் நடந்த அன்று சம்பவயிடத்தில் இல்லை என்றும், நகையை மீட்டு வருவதற்காக கிருஷ்ணகிரி சென்றிருந்தோம் என்று போலீசாரிடம் தெரிவித்ததாகவும், போலீசார் CCTV ஐ பார்த்து தாங்கள் இரவு 9.00 மணிக்கு கிருஷ்ணகிரியில் இருந்து வந்தோம் என்று உறுதி செய்து கொண்டார்கள் என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

xi) அ.சா.11 கிருஷ்ணன் தனது முதல் விசாரணையில், 2016 ம் ஆண்டு சின்னதம்பிக்கும், செல்வத்திற்கும் பணம் கொடுக்கல் வாங்கலில் சின்னதம்பியை செல்வம் கொன்றுவிட்டதாகவும், முன்விரோதம் காரணமாக 11.02.2020–ம் தேதி கார்த்திக் என்பவர் செல்வனின் அண்ணன் சீனிவாசன் என்பவரை இரவு 08.00 மணிக்கு வெட்டியதாக சொன்னார், தான் சம்பவயிடம் சென்றதாகவும், அப்போது அங்கு சீனிவாசன் இல்லை, அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் தாங்கள் சென்று அரசு மருத்துவமனையில் பார்த்ததாகவும், பின்பு 2 நாட்கள் கழித்து பால்ராஜ் என்பவரை போலீசார் கைது செய்தார்கள் எனவும், தங்களையும் அழைத்து அதன்பின்பு தங்களை எல்லோரையும் விசாரித்தார்கள் விசாரணையில் தாங்கள் போலீசாரிடம் 1, சக்திவேல் 2. பால்ராஜ் 3. சகாதேவன் ஆகிய மூவரும் நகையை

மீட்பதற்காக கிருஷ்ணகிரிக்கு சென்றோம் என போலீசாரிடம் தெரிவித்ததாகவும், அது போலவே விசாரணையில் சுங்கச்சாவடியில் உள்ள CCTV ஐ பார்த்தபோது சம்பவம் நடந்தபோது பால்ராஜ் அங்கு இல்லை என்பதை போலீசார் தெரிந்து கொண்டார்கள் எனவும், சுங்கசாவடியில் அவர்கள் வாகனம் கடந்து செல்லும் நேரம் இரவு 9.00 மணி எனவும், அதன் பின்பு விசாரணையில் பால்ராஜ்க்கும் இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று காவல் அதிகாரிகள் தெரிந்து கொண்டு தன்னிடமும் விசாரித்து வாக்குமூலம் பெற்று கொண்டதாகவும், தன்னையும் போலீசார் அழைத்து கொண்டு நகை கடையிலும், நான்கு வழிச்சாலை சோதனை சாவடியிலும் உள்ள CCTV பதிவையும் போலீசார் ஆய்வு செய்தார்கள் எனவும், பின்னர் போலீசார் ஏற்கனவே கைது செய்து வைத்திருந்த பால்ராஜை விடுவித்ததாக சாட்சியமளித்துள்ளார்.

xii) அ.சா.12 ஸ்ரீராமஜெயம் (மருத்துவர்) தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020–ம் தேதி இரவு 11.25 மணிக்கு, சீனிவாசன் த/பெ. கோவிந்தன் என்பவரை கேசவன் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்ததாகவும், அவரை பார்வையிட்டு விசாரித்ததில் அவர் சுய நினைவுடன் இருந்ததார் எனவும், பின்னர் அவர் தன்னை தெரிந்த 2 நபர்கள் 11.02.2020 ம் தேதி சுமார் இரவு 8.00 மணிக்கு ஆருப்பள்ளி அருகில் சீனிவாசன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது மற்ற இரு சக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் கூர்மையான ஆயுதங்களால் தாக்கியதாக கூறியதாகவும், அவர் ஏற்கனவே ஒசூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றுவிட்டு தான் பணி செய்யும் மருத்துவமனையான காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டதாகவும், பின்னர் அவரை பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டதாகவும் 1. 10 X 3 x 3 c.m. ஆழமான வெட்டுகாயம் கழுத்தின் பின்பகுதியில் காணப்பட்டதாகவும், 2. வலது கை முட்டி சிராய்ப்பு காயம் 3 x 2 c.m. அளவில் காணப்பட்டதாகவும், அவரை 11.02.2020 அன்றைய தினமே உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு பின்னர் 14.02.2020ம் தேதி சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும், மேற்படி காயங்கள் சாதாரண காயங்கள் என்று கருத்து தெரிவித்து காயச்சான்று வழங்கப்பட்டது எனவும், தான் வழங்கிய **காயச்சான்று அ.சா.ஆ,6** என்பதாக சாட்சியமளித்துள்ளார்.

xiii) அ.சா.13 ரவிச்சந்திரன் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்) தனது முதல் விசாரணையில், கடந்த 12.02.2020 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலின்பேரில் சூளகிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதிராமராஜ் என்பவரின் வாய்மொழி உத்தரவுபடி அன்றையதினம் காலை 07.45 மணிக்கு தான் ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரித்தபோது காயம்பட்ட சீனிவாசன் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக தகவல் தெரிந்து காவேரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சீனிவாசன் வயது 26 த/பெ. கோவிந்தன் என்பவரை மருத்துவரின் உதவியுடன் விசாரித்து சீனிவாசன் வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலத்தை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பதிவு செய்து பின்னர் அன்றையதினம் காலை 9.00 மணிக்கு நிலையம் வந்து மேல் நடவடிக்கைகாக புகார் வாக்குமூலத்தை காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

xiv) அ.சா.14 பூபதிராமராஜ் (காவல் உதவி ஆய்வாளர்) தனது முதல் விசாரணையில் கடந்த 12.02.2020 ம் ஆண்டு தான் சூளகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் அவர்கள் காவேரி மருத்துவமனையில் இருந்து சிகிச்சையில் இருந்த சீனிவாசன் வயது 26 த/பெ கோவிந்தன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று காலை 9.00 மணியளவில் காவல் நியைலத்தில் இருந்த தன்னிடம் ஒப்படைத்ததாகவும், தான் அந்த வாக்குமூலத்தை பெற்று எதிரிகள் கார்த்திக் மற்றும் பால்ராஜ் ஆகியோர்கள் மீது சூளகிரி காவல் நிலைய குற்ற எண்.59/2020 ச/பி 294(பி), 341, 307 இதச வாக வழக்கு பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7** எனவும், பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் வாக்குமூலத்தின் அசலையும் ஒசூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், அதன் நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிக்கு அனுப்பி வைத்ததாகவும், சூளகிரி காவல் ஆய்வாளர் வேறு பணி அலுவலில் இருந்ததால் அவரின் உத்தரவுபடி வழக்கின் கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 10.00

மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் 1. கோவிந்தராஜ் 2. கேசவ மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரை தயார் செய்ததாகவும், தான் தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா 5 மூலம் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும், தான் தயார் செய்த **மாதிரி வரைபடம் அ..சா.ஆ.8** எனவும், பின்னர் அன்றைய தினமே மற்ற சாட்சிகளான 1. சீனிவாசன் 2.. சுப்ரமணி 3. பெத்தன்னா 4. முரளி மற்றும் கோவிந்தராஜ் மற்றும் கேசவமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் மறுநாள் 13.02.2020 மதியம் 12.00 மணியளவில் சூளகிரி – கும்பலம் சாலையில் ஆவின் டீ கடை அருகே தாங்கள் போலிஸ் பார்ட்டியுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த நபரை தாங்கள் நிறுத்த முற்பட்டபோது அவர் ஓட எத்தனித்தார் அவரை பிடித்து விசாரிக்க அவரது பெயர் கார்த்திக், த/பெ. லட்சுமணன், ஆருப்பள்ளி என்றும் பின்னர் அவரை விசாரிக்க அவர் ஆருப்பள்ளியில் உள்ள சீனிவாசன் என்பவரை முன்பகையின் காரணமாக கத்தியால் வெட்டியதாக அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அன்றையதினம் மதியம் 12.10 மணிமுதல் 13.10 வரை சாட்சிகள் 1. வெங்கடராஜ் (40) 2. கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே அ,சா.6 மூலமாக அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், பின்னர் எதிரி ஓட்டி வந்த வாகனம் பதிவு எண் TN 70 R 0200, Hero splendor வாகனத்தை மதியம் 13:15 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதற்கு கைப்பற்றுதல் மகஜரை தயார் செய்ததாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.6 மூலமாக அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்பட்டு விட்டதாகவும், பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரியின் வீட்டின் பின்புறத்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அதை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி அன்றையதினமே மாலை 14:20 மணியைபோல் கைப்பற்றிய அருவாளுக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாகவும், அந்த 2 கைப்பற்றுதல் மகஜரும் சாட்சிகள் கையொப்பம் மற்றும் எதிரியின் கையொப்பமும் பெற்றதாகவும், 2 கைப்பற்றுதல் மகஜர்

ஏற்கனவே அ.சா.6 மூலம் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டுவிட்டதாகவும், பின்னர் எதிரியையும் கைப்பற்றிய பொருளையும் நிலையம் கொண்டு வந்து பின்னர் கைப்பற்றிய TN 70 R0200 Hero splendor என்ற இரு சக்கர வானத்திற்கும், கைப்பற்றிய சுமார் 28 செமீ நீளம் உள்ள வளைந்த கூர்மையான இரும்பு பகுதியும், சுமார் 11 செமீ நீளமுள்ள இரும்பு பூன் மற்றும் மரக்கைப்பிடியுடன் கூடிய கொடுவாள் ஆகிய 2 பொருட்களுக்கும் படிவம் 91 இரண்டு தயார் செய்ததாகவும், சான்று பொருள் **கொடுவாளுக்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 க்கு அ.சா.ஆ 9** ஆகவும், **இரு சக்கர வாகனத்திற்கு தயார் செய்யப்பட்ட படிவம் 91 க்கு அ.சா.ஆ 10** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் எதிரியையும், கைப்பற்றிய சான்று பொருட்களையும், தகுந்த பாரா காவல் வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், TN 70 R0200, Hero splendor என்ற இருசக்கர வாகனம் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், பின்னர் இவ்வழக்கின் கோப்புகளை மேல் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் ஒப்படைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

xv) அ.சா.15 யுவராஜ் (காவல் உதவி ஆய்வாளர்) தனது முதல் விசாரணையில், கடந்த 13.02.2020 ம் தேதி சூளகிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சூளகிரி காவல் நிலைய குற்ற எண்.59/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 307 இதசவின் கீழான முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பால்ராஜ் என்பவர் குறித்து விசாரணை செய்ய காவல் ஆய்வாளர் சூளகிரி அவர்களால் தனி அலுவல் நியமிக்கப்பட்டு போலிஸ் பார்ட்டியுடன் ஆருப்பள்ளி கிராமம் சென்று விசாரணை செய்த போது சம்பவ நாளான 11.02.2020 ம் தேதி பால்ராஜ் அவருடைய ஓனர் சகாதேவன் மற்றும் உடன் பணிபுரியும் சக்திவேல் ஆகியோருடன் கிருஷ்ணகிரி சென்றதாக கிடைத்த தகவலின் பேரில் ஆருப்பள்ளி ஊரைச்சார்ந்த கிருஷ்ணன் என்பவருடன் கிருஷ்ணகிரியில் உள்ள ஸ்ரீமுருகன் ஜீவல்லர்ஸ் கடையில் CCTV பதிவை பார்த்த போது பால்ராஜ் மற்றும் சகாதேவன் ஆகியோர்கள் கடையின் CCTV பதிவில் உள்ளது தெரிய வந்ததாகவும், கிருஷ்ணகிரி சுங்க சாவடியில் உள்ள CCTV பதிவுகளை தான் பார்வையிட்டபோது 11.0.2.2020 ம் தேதி மாலை 8.30 மணியை போல் பால்ராஜின் பல்சர் வாகனம் TN 70 AB 0015 என்ற வாகனத்தில் பால்ராஜ் மற்றும்

சகாதேவன் இருவரும் கடந்து சென்றது தெரியவந்ததாகவும், சம்பவ நேரத்தில் பால்ராஜ் கிருஷ்ணகிரியில் இருந்தது தெரிய வந்ததாக சாட்சியமளித்துள்ளார்.

xvi) அ.சா.16 முத்துகிருஷ்ணன் (காவல் ஆய்வாளர்) தனது முதல் விசாரணையில், கடந்த 11.02.2020 ம் தேதி காலகட்டத்தில் காவல் ஆய்வாளராக ஒசூர் உட்கோட்டம், சூளகிரி காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளராக பணிசெய்து வந்ததாகவும், கடந்த 11.02.2020ம் தேதியன்று தான் சொந்த வேலையின் காரணமாக சிறு விடுப்பு சென்றிருந்த படியால் அன்றைய தினம் சூளகிரி காவல் நிலையத்தில் குற்ற எண்.59/2020, ச/பி 294 (பி), 341, 307 இதச பிரிவின் கீழ் பதிவு செய்து வைத்திருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதி ராமராஜி என்பவர் மூலம் முதல் நிலை புலன் விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கு கோப்புகளை பெற்ற தான் கடந்த 15.02.2020ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரரான சீனிவாசன் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே பால்ராஜ் த/பெ அர்ஜீனன் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 16.02.2020ம் தேதியன்று இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் பதிவு செய்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் நிலை புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதிராமராஜ் என்பவரையும், சாட்சி செல்வம் த/பெ கோவிந்தன் என்பவரையும் விவாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் கடந்த 27.05.2020–ம் தேதி புலன் விசாரணை தொடர்ச்சியாக சாட்சிகள் 1. சகாதேவன் 2. சக்திவேல் 3. கிருஷ்ணன் 4. யுவராஜ் காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 05.06.2020–ம் தேதி ஒசூர் காவேரி மருத்துவமனை சென்று மருத்துவர் திரு. ஸ்ரீராமஜெயம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றை பெற்றதாகவும், தனது புலன் விசாரணையில் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்து இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 2 வது எதிரியான பால்ராஜ் என்பவர் இவ்வழக்கின் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் அவரது பெயரை நீக்கி, எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்ததாகவும், அந்த எதிரி நீக்கல் அறிக்கை வேண்டுகோள் கடித்தத்துடன் ஆனது **அ.சா.ஆ11** ஆக குறியீடு

செய்யப்பட்டதாகவும், பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து, எதிரி கார்த்திக் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 307 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**6.** அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள அம்சங்களை பொறுத்து பிரிவு 355 (1) (b)ன் கீழ் வினவிய போது அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதன் அடிப்படையில் எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது.

**<u>இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில்:–</u>**

**7.** இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசுதரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>பிரச்சினைக்கான தீர்வு:–</u>**

8. அரசு தரப்பு வழக்கானது கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 08.00 மணிக்கு, சூளகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆறுப்பள்ளியிலிருந்து கோனதிம்மனப்பள்ளி ரோட்டில், சாட்சி சுப்பிரமணி வீட்டிற்கு அருகில், எதிரி கார்த்திக், அ.சா.1 சீனிவாசனை கொலை செய்யும் நோக்கத்தோடு சீனிவாசன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை வழிமறித்து, "தேவடியா மகனே" திட்டி வீச்சருவாளால் "இத்தோடு ஒழிந்து போடா" என்று சொல்லி கழுத்தின் பின்பகுதியில் வெட்டி கீழே விழுந்ததில் அ.சா1க்கு பின்கழுத்திலும், கால் முட்டியிலும் காயத்தை ஏற்படுத்தி கொலை முயற்சி செய்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 294 (b), 341, 307–ன் பிரிவுகளின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக சூளகிரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக மாண்புமிகு கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.202/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9. அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.16 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் அருவாள் அ.சா.பொ.1 ஆகவும், Hero Splendor TN-70-R-0200 இரு சக்கர வாகனம் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியமும் முன்னிறுத்தவும் இல்லை, குறியீடு செய்யப்படவும் இல்லை.

**10. இரு தரப்பு வாதங்கள் : –**

(i). அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தில், எதிரி குடும்பத்தாருக்கும் அ.சா.1 குடும்பத்தாருக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தில் எதிரி திட்டமிட்டு அ.சா.1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் ஆருப்பள்ளி பெத்தன்னன் வீட்டின் அருகே அ.சா.1 ஐ வழிமறித்து, திட்டி, மிரட்டி, எதிரி மறைத்து வைத்திருந்த வீச்சருவாளை எடுத்து, இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி, பின் பக்க கழுத்தில் வெட்டியும் , அதனால் கீழே விழுந்த அ.சா.1 க்கு கால் முட்டியில் சீராய்ப்பு காயங்களையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், அந்த அ.சா.பொ.1 ஆன வீச்சருவாளும் கைப்பற்றி அரசு தரப்பு வழக்கை அரசு தரப்பில் போதிய சாட்சி சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

(ii) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பாலகிருஷ்ணா அவர்கள் அரசு தரப்பு வழக்கை மறுத்து, அ.சா.1 ன் தம்பி செல்வத்திற்கும், எதிரியின் அண்ணன் சின்னதம்பிக்கும் கடந்த 2016ம் ஆண்டு பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ,பிரச்சனை ஏற்பட்டு அதில், அ.சா.1 ன் தம்பி செல்வம் மேற்படி எதிரியின் அண்ணன் சின்னதம்பியை கொலைசெய்து விட்டதாக கூறி செல்வத்தின் மீது சூளகிரி காவல் நிலைய குற்ற எண்.436/2016, ச/பி 341, 294(பி), 302 இதச வின் கீழ் கடந்த 22.09.2016 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு அவ்வழக்கு மாண்புமிகு ஒசூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் SC.No. 48/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கு

விசாரணை நிலையில் உள்ளதாகவும், அதனால் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலும், அந்த வழக்கில் இருந்து செல்வத்தை தப்பிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் அ.சா 1 ஆல் பொய்யாக புகார் கொடுப்பட்டதாகவும், தெரியாத நபர் செய்த சம்பவத்திற்காக எதிரி மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சம்பவத்தின் போது எதிரி சம்பவ இடத்திலோ, அந்த ஊரிலோ இல்லை என்றும், சம்பவத்தின் போது எதிரி பல்சர் வாகனத்தை பயன்படுத்தவில்லை என்றும், இந்த வழக்கில் சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சாட்சிகளையும் சான்றாவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அவசர கதியில் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பு சாட்சிகள் முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாகவும் அரசு தரப்பில் உரிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்க தவறிவிட்டாகவும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

11. (i) இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் தான் சூளகிரியின் உள்ள HB பெட்ரோல் பங்கில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் தான் வேலை முடித்து விட்டு சூளகிரியின் இருந்து ஆருப்பள்ளி பெத்தன வீட்டின் அருகே இரு சக்கர வாகனத்தில் போகும் போது இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாகவும் பின்னர் தான் ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சூளகிரி போலிசார் அங்கு வந்து தன்னை விசாரித்து அ.சா.ஆ 1 ஆன புகார் வாக்குமூலத்தை பெற்றதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அதேபோல் மேற்படி அ.சா 1 யிடம் வாக்குமூலம் பெற்ற அ.சா 13 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 12.02.2020 ம் தேதி ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அ.சா 14 சூளகிரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. பூபதி ராமராஜன் அவர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் அன்றைய தினம் காலை 7.45

மணியைபோல் அங்கு சென்று விசாரித்த போது அ.சா 1 மேல் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு சென்று விட்டதாக கிடைத்த தகவலின்பேரில், அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு அங்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா 1 ஐ விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று காலை 9.00 மணியைபோல் நிலையம் வந்து அ.சா 14 ன் பார்வைக்கு வைத்ததாகக் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதைப்பெற்ற அ.சா 14 ம் அன்றைய தினமே காலை 9.00 மணியைபோல் புகார் வாக்குமூலத்தின் படி சூளகிரி காவல் நிலைய குற்ற எண் 59/2020, ச/பி 296(பி), 341, 307 இதச வின் கீழ் அ.சா.ஆ 7 ஆன முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) ஆனால், எதிரி தரப்பில் அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலமானது எதிரி குடும்பத்தாரின் மீது உள்ள முன் விரோதம் காரணமாகவும், எதிரி குடும்பத்தை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலும், பொய்யாக கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலம் என்று வாதம் முன் வைக்கப்பட்டது. அவ்வாறு முன்வைக்கப்பட்ட வாதத்திற்கு எதிரி தரப்பில் எந்தவொரு ஆள்சாட்சியமோ, ஆவணச்சாட்சியமோ முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை. இங்கு அ.சா 1 மற்றும் அ.சா 13 ன் சாட்சியத்தையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா 14 ன் சாட்சியத்தையும் மற்றும் எதிரி தரப்பில் முன்வைத்த வாதத்தையும் வைத்து கூர்ந்து பரிசீலிக்கையில் இவ்வழக்கின் புகார் வாக்குமூலமான அ.சா.ஆ 1 ஆனது அ.சா 1 ஆல் கொடுக்கப்பட்டது என்பதையும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா. 13 ல் பெறப்பட்டது என்பதையும், அதன்படி அ.சா.ஆ 7 ஆன முதல் தகவல் அறிக்கையானது அ.சா 14 ஆல் பதிவு செய்யப்பட்டது என்பதையும் அரசு தரப்பில் உரிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. (i) இவ்வழக்கில் முதல் நிலை புலன் விசாரணை செய்த அ.சா.14 காவல் உதவி ஆய்வாளர் திரு. பூபதிராஜா அவர்கள் அவரது நீதிமன்ற விசாரணையில் சூளகிரி காவல் ஆய்வாளர் வேறு பணி அலுவலில் இருந்ததால் அவரின் உத்தரவுப்படி 12.02.2020 ம் தேதி வழக்குகோப்புகளை புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டதாகவும் அன்றைய தினமே காலை 10.00 மணியைபோல் சம்பவ இடம்

சென்று சாட்சிகள் அ.சா.5 கோவிந்தராஜ், அ.சா.2 கேசவமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 ஆன பார்வை மகஜர், அ.சா.ஆ.8 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் அ.சா.2, அ.சா.5 ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அதை உறுதியூட்டி சம்பவ இடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 கோவிந்தராஜ் அவரது நீதிமன்ற விசாரணையில், தானும், கேசவனும் இருந்த போது, போலிசார் சம்பவ இடத்தை படம் வரைந்ததாகவும், தாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், கூறி அ.சா.ஆ 2 ஆன பார்வை மகஜர் அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், மற்றொரு சாட்சியான அ.சா 2 கேசவமூர்த்தி அவரது நீதிமன்ற விசாரணையில் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடைய அல்ல என்று அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்திருந்தபோதிலும், அ,சா.5 ன் சாட்சியத்தையும், முதல்நிலை புலன் விசாரணை அதிகாரியான அ.சா.14 ன் சாட்சியத்தையும் வலுவிலக்க செய்வது போல் அ.சா 2 ன் சாட்சியம் அமையவில்லை என்பதை வைத்து பார்க்கும்போது, இவ்வழக்கின் சம்பவ இடமானது ஆருப்பள்ளி – கோணதிம்மனப்பள்ளி தார் ரோட்டின் வலது புறம் நடந்துள்ளது என்பதையும், அங்கு அ.சா.14 சென்றதையும், சம்பவ இடத்தில் வைத்து அ.சா.ஆ.2 ஆன பார்வை மகஜர், அ.சா.ஆ.8 ஆன மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்ததையும், அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. (i) இவ்வழக்கில் காயம்பட்டவரும் புகார் வாக்குமூலம் கொடுத்தவரும் , அ.சா 1 மான ஸ்ரீனிவாசன் கொடுத்த புகார் வாக்குமூலத்திலும் அவரது நீதிமன்ற விசாரணையிலும் என் தம்பி செல்வத்திற்கும் எங்கள் ஊரைச்சேர்ந்த லட்சுமணன் மகனும், எதிரியின் அண்ணனுமான சின்ன தம்பி என்பவருக்கும் 2016 ம் ஆண்டு பணம் கொடுக்கல் வாங்க சம்மந்தமாக தகராறு ஏற்பட்டு, சின்னதம்பியை கொலை செய்து விட்டதாக, புகார் கொடுக்கப்பட்டு, சூளகிரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு

செய்யப்பட்டு, வழக்கு முடிவடையாமல் இருந்து வருவதாகவும், அதனால் இறந்து விட்ட சின்னத்தம்பியின் தம்பியான எதிரி எங்களில் யாரையாவது கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு வந்ததால் எங்களுக்குள் முன் விரோதம் இருந்து வந்தததாக கூறியுள்ளார். அதை எதிரி தரப்பிலும் அ.சா 1 ன் குறுக்கு விசாரணையில் அது பற்றி கேள்வியாக எழுப்பப்பட்டு அதை அ.சா 1 ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) மேற்படி முன்விரோதம் குறித்து அரசு தரப்பில் முன்நிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களை ஆராயும் போது மேற்படி முன்விரோத சம்பவம் குறித்து சூளகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அ.சா 1 ன் தம்பி செல்வம் த/பெ கோவிந்தப்பா என்பவர் மீது சூளகிரி காவல் நிலைய குற்ற எண் 436/2016 ச/பி 341, 294(பி), 302 இதச வின் கீழ் கடந்த 22.09.2016 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு அவ்வழக்கு மாண்புமிகு ஒசூர் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் SC.No. 48/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலையில் உள்ளது என்பது தெரிய வருகிறது. இங்கு அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலம், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் மேற்படி மாண்புமிகு ஒசூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு ஆகியவற்றை வைத்து பார்க்கும் போது அ.சா 1 குடும்பத்தாருக்கும் எதிரியின் குடும்பத்தாருக்கும் முன்விரோதம் இருந்து வருவதை அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. (i) இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் அ.சா 1 கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் தான் வேலை முடித்து விட்டு சூளகிரியின் இருந்து ஆருப்பள்ளி பெத்தன வீட்டின் அருகே இரு சக்கர வாகனத்தில் போகும் போது தன்னை தொடர்ந்து பின்னால் வந்த எங்கள் ஊரைச்சார்ந்த அர்ஜீனன் மகன் பால்ராஜ் என்பவர் பல்சர் வண்டியை ஓட்ட எதிரி பின்னால் உட்கார்ந்து வந்ததாக கூறியும் அவரது நீதிமன்ற விசாரணையில் தனக்கு பின்னால் அர்ஜீனன் மகன் பால்ராஜ் பல்சர் வண்டியை ஓட்ட பின்னால் ஆஜர் எதிரி கார்த்திக் உட்கார்ந்து வந்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் அ.சா 1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான

அ.சா 12 மருத்துவர் திரு. ஸ்ரீராமஜெயம் அவர்கள் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 11.02.2020 இரவு 11.25 மணியைபோல் மருத்துவமனைக்கு வந்த அ.சா 1 ஸ்ரீனிவாசன் என்பவரை விசாரித்த போது தனக்கு தெரிந்த 2 நபர்கள் ஆருப்பள்ளி அருகே இரு சக்கர வாகனத்தில் வந்து கூர்மையான ஆயுதத்தில் தாக்கியதாக தன்னிடம் கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) மேலும், அ.சா 15 காவல் ஆய்வாளர் திரு. யுவராஜ் அவர்கள் அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 13.02.2020 ம் தேதி சூளகிரி காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது இவ்வழக்கு குற்ற எண்ணில் பால்ராஜ் என்பவர் சம்மந்தப்பட்டு இருப்பதாகவும், அதை பற்றி விசாரிக்க தனி அலுவலாக தன்னை நியமிக்கப்பட்டதால் போலிஸ் பார்டியுடன் ஆருப்பள்ளி கிராமம் சென்று விசாரணை செய்ததில் கடந்த 11.02.2020 ம் தேதி பால்ராஜ் என்பவர் அவரது முதலாளி சகாதேவனும் மற்றும் அவருடன் பணிபுரியும் சக்திவேல் ஆகியோர்களுடன் கிருஷ்ணகிரியில் உள்ள ஸ்ரீமுருகன் ஜீவல்லர்ஸ் கடைக்கு சென்றிருந்ததை அங்கு வைத்துள்ள CCTV பதிவையும், பின்னர் கிருஷ்ணகிரி சுங்கசாவடியில் உள்ள CCTV பதிவையும் விசாரித்து பார்வையிட்டதாகவும் அதில் கடந்த 11.02.2020 இரவு 8.30 மணியைபோல் பால்ராஜ்ம் சகாதேவனும் TN 70 AB 0015 என்ற பல்சர் வாகனத்தில் கிருஷ்ணகிரி ஸ்ரீ முருகன் ஜுவல்லரிக்கு சென்றதும், கிருஷ்ணகிரி சுங்க சாவடியை கடந்து சென்றதும் பார்வையிட்டு அது குறித்து அ.சா.16 சூளகிரி காவல் ஆய்வாளரிடம் தெரிவித்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அதேபோல், இவ்வழக்கில் 2 வது எதிரியாக சேர்க்கப்பட்டு பின்னர் நீக்கம் செய்யப்பட்ட அ.சா 7 பால்ராஜ் அவரது நீதிமன்ற விசாரணையில் தனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தன்று தான் கிருஷ்ணகிரி சென்றதாகவும் அவ்வாறு சென்றதற்கு கிருஷ்ணகிரி சுங்க கட்டண சோதனை சாவடியில் பதிவுகள் இருப்பதாகவும், அதனால் இவ்வழக்கிற்கும் தனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல், அ.சா.9 சகாதேவன் என்பவரும் அவரது

நீதிமன்ற விசாரணையில் கடந்த 11.02.2020 ம் தேதி தானும் பால்ராஜ்ம் கிருஷ்ணகிரி சென்று நகை எடுத்து விட்டு வந்ததாகவும், அதுபற்றிய CCTV பதிவுகள் நகை கடையிலும், கிருஷ்ணகிரி கட்டண சோதனை சாவடியிலும் உள்ளதாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் அ.சா 10 சக்திவேல் என்பவரும், அ.சா.11 கிருஷ்ணன் என்பவரும், அ.சா.7, 9 சொன்னதை போல கூறி அவர்களது சாட்சியங்களை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(iv) மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா 16 தற்போது காவல் துணை கண்காணிப்பாளர், பர்கூர் திரு. முத்து கிருஷ்ணன் அவர்கள் அவரது நீதிமன்ற விசாரணையில், அ.சா 9 சகாதேவன், அ.சா 10 சக்திவேல், அ.சா 11 கிருஷ்ணன் மற்றும் அ.சா 15 காவல் உதவி ஆய்வாளர் திரு. யுவராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்து இவ்வழக்கு சம்பவத்தில் பால்ராஜ் என்பவர் ஈடுபடவில்லை என்று தெரிய வந்ததால் அவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி அ.சா.ஆ.11 ஆன நீக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக கூறியும், இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட பல்சர் வாகனத்தை கைப்பற்றபடவில்லை என்று கூறியும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) மேற்படி அ.சா.1, அ.சா.7, அ.சா.9, அ.சா.10, அ.சா.11, அ.சா.12, அ.சா.15 மற்றும் அ.சா.16 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களையும், அ.சா.ஆ.11 ஆன எதிரி நீக்கல் அறிக்கையையும் வைத்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கு சம்பவத்தின் போது பல்சர் என்ற வாகனத்தை பால்ராஜ் என்பவர் ஓட்ட பின்னால் எதிரி அமர்ந்து வந்ததாக அ.சா.1 புகார் வாக்குமூலத்திலும், அவரது நீதிமன்ற சாட்சியத்திலும் கூறப்பட்டிருந்தபோதும்,. அ.சா.1 அந்த பல்சர் வாகனத்தின் நிறத்தையோ, பதிவு எண்ணை பற்றியோ எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை. அதேபோல் காவல் துறை தரப்பு சாட்சியத்திலும் அந்த பல்சர் வாகனமும் கைப்பற்றப்படவில்லை என்றே கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வழக்கு சம்பவத்தில் பால்ராஜ் என்பவர் ஈடுபடவில்லை என்பதும், அதேபோல்,

இவ்வழக்கு சம்பவத்தில் பல்சர் வாகனமும் ஈடுபடுத்தப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

15. இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் தான் சூளகிரியின் உள்ள HB பெட்ரோல் பங்கில் சேல்ஸ் மேனாக வேலை செய்து வருவதாகவும், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் தான் வேலை முடித்து விட்டு சூளகிரியின் இருந்து ஆருப்பள்ளி பெத்தன வீட்டின் அருகே இரு சக்கர வாகனத்தில் போகும் போது எதிரி இரு சக்கர வாகனத்தில் வந்து தான் சென்ற வண்டியை தடுத்து நிறுத்தியதாக கூறியும் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் தன்னை எதிரி வழிமறித்தாக கூறியும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் இங்கு அரசு தரப்பிலேயே எதிரியால் இவ்வழக்கு சம்பவத்தில் பல்சர் என்ற இருசக்கர வாகனம் பயன்படுத்தப்படவில்லை என்று கூறி ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில் எதிரி, அ.சா.1ஐ பல்சர் வாகனத்தின் மூலம் தடுத்து நிறுத்தியதாக கூறுவதை அரசு தரப்பில் மெய்பிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இவ்வழக்கில் அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எதிரி சம்பவ இடத்தில் வைத்து ஏண்டா தேவிடியா மகனே எத்தனை நாள் தப்பிச்சுக்கிட்டே இருப்பாய் என்று சொல்லி திட்டியதாக கூறியும் அவரது நீதிமன்ற சாட்சியத்திலும் எதிரி தன்னை கெட்ட வார்த்தையால் திட்டியதாக கூறியும் சாட்சியமளித்துள்ளார். இங்கு அ.சா.1ன் புகார் வாக்குமூலம், நீதிமன்ற சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.8 ஆன மாதிரி வரைபடம், அ.சா.ஆ.2 ஆன பார்வை மகஜர் ஆகிய ஆவணங்களை பரிசீலிக்கையில், சம்பவயிடம் ஆருப்பள்ளி – கோணதிம்மனப்பள்ளி தார் ரோடு என்பதும், அது பொதுவிடம் என்பதும் தெரிய வருகின்றது. மேலும் சம்பவ இடத்தில் எதிரி மற்றும் அ.சா.1யை தவிர வேறு நபர்கள் இருந்ததாக புகார் வாக்குமூலத்திலும், சாட்சியத்திலும் குறிப்பாக எந்தவொரு சாட்சியமும் சொல்லவில்லை. அந்த வகையில் எதிரி, அ.சா.1யை திட்டியதால் அ.சா.1ற்கு அவமானம் ஏற்பட்டதாக கருத இயலாது, எனவே எதிரி திட்டியதால் அ.சா.1க்கு அவமானம் ஏற்பட்டதாக எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. (i) இவ்வழக்கில் அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், நீதிமன்ற சாட்சியத்திலும், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் தான் வேலை முடித்து விட்டு சூளகிரியில் இருந்து ஆருப்பள்ளி பெத்தன வீட்டின் அருகே இரு சக்கர வாகனத்தில் போகும் போது தனக்கு பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்த எதிரி கார்த்திக் இத்தனை நாள் தப்பித்துவிட்டாய் இப்போது எங்களிடம் மாட்டிக்கொண்டாய் என்று கூறி அவர் மறைத்து வைத்திருந்த அ.சா.பொ 1 ஆன வீச்சருவாளை எடுத்து இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி தனது பின் பக்க தலையில் வெட்டியதாகவும் அதனால் தனக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்ததில் முட்டியில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டாத கூறி அ.சா.பொ 1 ஆன வீச்சருவாளை அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) இங்கு, அ.சா 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தையும் அவரது நீதிமன்ற சாட்சியத்தையும் பரிசீலிக்கும் போது, அ.சா 1 ன் குடும்பத்தாருக்கும் , எதிரியின் குடும்பத்தாருக்கும், முன் விரோதம் உள்ளது என்பதை அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது. அதனால் எதிரியை பற்றியும், எதிரியின் அடையாளத்தை பற்றியும் அ.சா 1 க்கு ஏற்கனவே, நன்கு தெரிந்திருக்கும் நிலை உள்ளது. அந்த வகையில் **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134 ஆனது சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும், சாட்சியத்தின் நம்பகத்தன்மையே முக்கியம் என்றே கூறுகிறது.** அந்த வகையில், அ.சா 1 சம்பவம் நடந்தவுடன், மயக்கம் அடைந்ததாக எதுவும் கூறவில்லை. அதேபோல், எதிரி தன்னை அ.சா.பொ 1 ஐ வைத்து தனது பின் கழுத்தில் வெட்டியதாகவும், அதனால் கீழே விழுந்ததில் காலில் சிராய்பு காயம் ஏற்பட்டதாக அ.சா 1 அவரது புகாரிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் தெளிவாக கூறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா 1 ன் சாட்சியத்தை பொறுத்து நம்பகத்தன்மை உடையதாகவே, இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. (i) சம்பவம் நடந்தவுடன் அ.சா 1, அ.சா 3 ஆன சுப்ரமணியனின், வீட்டை நோக்கி ஓடி அந்த வீட்டின் வெளியே இருந்தவர்களிடம் நடந்ததை கூறியதாகவும்

அதற்கு அவர்கள் தனது கழுத்தில் இரத்தம் வராமல் தடுக்க துணி கொடுத்ததாகவும், அதன்பின்னர் தனது நண்பர் முரளி என்பவருக்கு போன் செய்து தகவல் சொல்லி அவர் வந்து தன்னை சூளகிரியில் உள்ள விஜயா மருத்துவமனைக்கு அழைத்து சென்றும், ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றும் அதன் பின்னர் ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தும் விட்டதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) . மேலும், அ.சா.3 ஆன சுப்பரமணி என்பவரும் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் 11.02.2020 ம் தேதி சீனிவாசன் என்பவர் அடிபட்டு கத்திக்கொண்டு தனது வீட்டு அருகே வந்ததாகவும், பின்னர் தன்னிடம் இருந்த துண்டை கேட்டு பெற்றதாகவும் கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்திருந்தபோதும், சம்பவத்திற்கு சிறிது நேரத்திற்கு பின்னர் நடந்த விவரங்களை பற்றி தெளிவாக கூறியுள்ளார். அதேபோல், அ.சா 4 முரளி என்பவரும் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் ,

> கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது சீனிவாசன் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு கார்த்திக் என்பவர் தன்னை வெட்டிவிட்டதாக அழுது கொண்டே என்னிடம் சொன்னார். நான் எனது காரை எடுத்து கொண்டு போய் அவரை விஜயா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். நான் பார்க்கும்போது சீனிவாசனுக்கு பின் கழுத்தில் வெட்டுக்காயம் இருந்தது. இரத்தம் வளிந்து துண்டால் கட்டப்பட்டிருந்தது. முதலில் , ஒசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், பின்னர் காயம் அதிகமாக இருந்ததால் ஒசூர் குணம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தாக

கூறி சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்கு பின்னர் நடந்த விவரங்களை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அதேபோல், அ.சா 5 கோவிந்தராஜ் என்பவரும் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 10,00 மணியைபோல் தான் வீட்டில்

இருந்த போது அ.சா. 1 ன் அப்பா தனக்கு போன் செய்து, அ.சா 1 ஐ யாரோ வெட்டி விட்டார்கள் என்றும், போய் பார்க்கும் படி கூறிவே, தான் சென்ற பார்த்தபோது , அதற்கு முன்பாகவே அ.சா 1 ஐ முரளி என்பவர் மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டதாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) மேற்படி அ.சா 3, அ.சா 4, அ.சா 5, ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களையும் , சான்றாவணங்களையும் வைத்து பார்க்கும் போது, **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 6 ஆனது – ஒன்றிய செயல் ( இதை – ஒரு சம்பவத்தின் பல பாகங்கள் (அ) பல கூறுகள் என கூறலாம். ) ஒரு சம்பவத்தின் போதோ (அ) சம்பவத்திற்கு சிறிது நேரத்திற்கும் முன்போ (அ) பின்போ, யார் எதை செய்தாலும், யார் எதை சொன்னாலும், தொடர்புடைய பொருண்மைகள் ஆகும். ( இடம், நேரம், நெருக்கம், இருக்க வேண்டும்) என்று கூறுகிறது.** அந்த வகையில் மேற்படி, அ.சா1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து இவ்வழக்கின் சம்பவத்திற்கு பின் உடனடி நெருக்கமாக நடந்த சங்கதிகளை பற்றி அ.சா 3, அ.சா 4, அ.சா 5 ஆகிய சாட்சிகள் உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

19. மேலும், இவ்வழக்கில் அ.சா.1 க்கு சிகிச்சை வழங்கிய அ.சா.12 மருத்துவர் திரு. ஸ்ரீராமஜெயம் அவர்கள் அவரது நீதிமன்ற சாட்சியத்தில்,

| |
|---|
| கடந்த 11.02.2020 இரவு 11.25 மணியைபோல் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்ட அ.சா.1 ஸ்ரீனிவாசன் என்பவரை விசாரித்தபோது தனக்கு தெரிந்த 2 நபர்கள் ஆருப்பள்ளி அருகே இரு சக்கர வாகனத்தில் வந்து கூர்மையான ஆயுதத்தில் தாக்கியதாக தன்னிடம் கூறியதாகவும், அவரை பரிசோதித்தபோது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் **1. 10x3x3 செ.மீ. ஆழமான வெட்டுகாயம் கழுத்தின் பின்பகுதியில் காணப்பட்டது, 2. வலதுகை முட்டியில் சிராய்ப்பு காயம் 3x2 செ.மீ. அளவில் காணப்பட்டது. 3. வலதுகால் முட்டியில் சிராய்ப்பு காயம் சுமார் 2x2 செ.மீ அளவில் காணப்பட்டது.** அவரை உள்நோயாளியாக அனுமதித்து |

| |
|---|
| 14.02.2020ம் தேதி வரை சிகிச்சை வழங்கியதாகவும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் கருத்து தெரிவித்து அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியதாகவும் கூறி |

அ.சா 1 க்கு ஏற்பட்ட காயங்களை பற்றியும், அதன் தன்மைகளை பற்றியும், அவருக்கு வழங்கிய சிகிச்சை பற்றியும் கூறி அ.சா 1 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

20. ஆனால் எதிரி தரப்பில், அ.சா 1 ன் தம்பி மீதும் போடப்பட்ட கொலை வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும், அடையாளம் தெரியாத நபர் செய்த சம்பவத்திற்கு , எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டு தவறுதலாக வழக்கு போடப்பட்டதாகவும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று கூறி வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்கு எதிரி தரப்பில் எந்தவொரு ஆள் சாட்சியமோ, ஆவண சாட்சியமோ, முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை. **மேலும், எதிரி தரப்பில் அ.சா 1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா 12 திரு. ஸ்ரீராமஜெயம் என்பவரின் குறுக்கு விசாரைணயில், அ.சா 1 க்கு ஏற்பட்ட காயங்கள் ஒருவர் இரு சக்கரவாகத்தில் செல்லும் போது நிலைதடுமாறி கீழே கூர்மையான கல் பகுதியில் விழுந்தால் கூட அவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா ? என்று எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி 2, 3 காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது, ஆனால், 1 வது காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்.**

21. இங்கு அ.சா 1, அ.சா 3, அ.சா 4, அ.சா 5 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களையும், அ.சா 12 ன் சாட்சியத்தையும் அவரால் வழங்கப்பட்ட அ.சா.ஆ 6 ஆன காயச்சான்றையும் வைத்து பார்க்கும் போது இவ்வழக்கு சம்பவத்தின் போது அ.சா 1 க்கு 1 வது காயமான கழுத்தின் பின்பகுதியில் 10X3X3 செ.மீ ஆழமான வெட்டு காயமும், கீழே விழுந்ததில் 2 வது காயமான வலது கை முட்டியில் 3X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயமும், 3 வது காயமான வலது கால் முட்டியில் 2X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயமும் உள்ளதை அரசு தரப்பில் உரிய சாட்சி சான்றாவணங்களுடன்

நிருபிக்கப்பட்டதாவே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், ஒரு மனிதனின் கழுத்து பகுதியானது மிகவும் மென்மையாகவும், சிறு தாக்குதலுக்கு உள்ளானாலும் உயிர் இழப்பு ஏற்படும் என்பது தெரிந்தே மேற்படி காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

22. மேலும், இவ்வழக்கின் முதல் நிலை புலன் விசாரணை அதிகாரியான அ.சா.14 அவரது நீதிமன்ற விசாரணையில் புலன் விசாரணையின் தொடர்ச்சியாக

> எதிரியை தேடி வந்த நிலையில் 13.02.2020ம் தேதி மதியம் 12.00 மணியைபோல் சூளகிரி – கும்பலம் சாலையில் போலிஸ் பார்டியுடன் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த எதிரியை கைது செய்து விசாரிக்க அவர், தானாக முன்வந்து அ.சா 1 சீனிவாசனை முன்பகையால் வெட்டியதாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா 6 வெங்கடேஷ், அ.சா 11 கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மதியம் 12.10 மணிமுதல் 01.10 மணிவரை பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி , அன்றைய தினமே மதியம் 01.15 மணியைபோல் எதிரி ஓட்டி வந்த அ.சாபொ 2 ஆன, TN 70 RO200 HERO SPLENDOR என்ற இரு சக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையிலும், அ.சா.ஆ 4 ஆன கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி பின்னர், எதிரியின் வீட்டு பின்புறத்தில் எதிரி மறைத்து வைத்திருந்த அ.சா.பொ 1 ஆன சுமார் 11 செ.மீ நீளமுள்ள இரும்பு கூர் மற்றும் மரக்கைப்பிடியுடன் கூடிய அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் மதியம் 2.20 மணியைபோல் அ.சா.ஆ 5 ஆன கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி பின்னர், சான்று பொருட்களுக்கு அ.சா.ஆ 10 மற்றும் அ.சா.ஆ 9 ஆன இரண்டு 91 படிவங்கள் தயார் செய்து எதிரியையும் சான்றுபொருட்களையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாக,

கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

23. அதேபோல், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்

சாட்சிகளான அ.சா.6 வெங்கடராஜ் அவரது நீதிமன்ற சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 7.30 மணிமுதல் 8.00 மணியைபோல் எதிரி கார்த்திக் அ.சா 1 சீனிவாசனை வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டதாகவும், சம்பவம் நடந்த பின் 3 நாள்கள் கழித்து , 13.02.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணியைபோல் கும்பலம் ஜங்சன் அருகே வைத்து எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அவர் வந்த இரு சக்கர வாகனத்தையும், எதிரியின் வீட்டின் பின்புறத்தில் இருந்து கத்தி ஒன்றை கைப்பற்றியதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜர்களிலும், கையொப்பமிட்டதாகவும் கூறி அ.சா.பொ 1 ஆன கொடுவாளை அடையாளப்படுத்தி அ.சா 14 ன் சாட்சியத்தை வலுவூட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

24. ஆனால் இங்கு எதிரி தரப்பில், கடந்த 13.02.2020 ம் தேதி மதியம் 2.00 மணியைபோல் சூளகிரி – கும்பலம் சாலையில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றும் , எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் , அதனடிப்படையில் எந்தவொரு சான்று பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை என்றும் கூறி வாதம் முன்வைக்கப்பட்டது. அவ்வாறு எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை நிருபிக்க எந்தவொரு ஆள் சாட்சியத்தையும் , ஆவண சாட்சியத்தையும் முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை . இங்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா 14 ன் சாட்சியத்தையும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா 6 ன் சாட்சியத்தையும் வைத்து பார்க்கும் போது, எதிரியிடம் இருந்து அ.சா.பொ.1 ஆன வீச்சருவாள் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதை அ.சா 1 ம், அதேபோல் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா 6 ம் நீதிமன்றத்தில் வைத்து அ.சா.பொ 1 ஐ அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்கள். இங்கு அ.சா.பொ 1 ஆன வீச்சருவாள் ஆனது கொடும் ஆயுதம் என்ற வகைப்பாட்டில் வருகிறது. அந்த ஆயுதத்தால் மனிதனின் உடலில் உள்ள உயிர் தளங்களில் தாக்கினாலோ, வெட்டினாலோ உடனடியாக இறப்பை ஏற்படுத்தும் ஒரு ஆயுதம் ஆகும்.

25. மேலும், இவ்வழக்கின் கோப்புகளை தொடர் புலன் விசாரணைக்காக 15.02.2020 ம் தேதி பெற்ற அ.சா 16 அ.சா 1 சீனிவாசன், அ.சா 7 பால்ராஜ் ஆகியவர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்து, 16.02.2020 ம் தேதி புகார் வாக்குமூலம் பெற்ற அ.சா 13 ஐயும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா 14 ஐயும், அ.சா 8 செல்வம் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 05.06.2020 ம் தேதி அ.சா 1 க்கு சிகிச்சை அளித்த அ.சா 12 மருத்துவர் திரு. ஸ்ரீராமஜெயம் அவர்களை விசாரித்து அ.சா.ஆ 6 ஆன காயச்சான்று பெற்று, அ.சா 7 பால்ராஜ் என்பவரை இவ்வழக்கில் இருந்து நீக்கி புலன் விசாரணை முடித்து எதிரி மீது ச/பி 294(பி), 341, 307 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

26. ஆனால் எதிரி தரப்பில், அ.சா 1 ன் தம்பி மீதும் போடப்பட்ட கொலை வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டதாக எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை பொறுத்து, **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101– ஒருவர் ஒன்னைச் சொல்கிறார். அவரே அதை நிரூபிக்க வேண்டும். இதுவே, நிரூபிக்கும் சுமை அவரையேச் சார்ந்தது ஆகும்.** அந்த வகையில் எதிரி முன் வைத்த வாதத்தை நிருபிக்க எந்தவொரு சாட்சியத்தையும், சான்றாவணத்தையும் முன்நிறுத்தவும் இல்லை . மேலும், அடையாளம் தெரியாத நபர் செய்த சம்பவத்திற்கு எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக கூறி வாதம் முன்வைக்கப்பட்டது. அவ்வாறு கூறியுள்ளதை பொறுத்து **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 ஆனது ஒருவருக்கு மட்டுமே சிறப்பாக தெரிந்திருக்க வேண்டிய விஷயத்தை அவரே தான் நிருபிக்க வேண்டும் என்று கூறுகிறது.** அந்த வகையில் , எதிரி இவ்வழக்கின் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றோ, அந்த அடையாளம் தெரியாத நபர் யார் என்று குறிப்பிட்டு சாட்சியத்தையோ சான்றாவணத்தையோ முன்நிறுத்தவும் இல்லை தாக்கல் செய்யவும் இல்லை மேலும் எதிரி தரப்பில் , தான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றோ, சம்பவ காலத்தில் வேறு ஊரில் குடியிருந்ததாகவும், கூறி முன்வைக்கப்பட்ட வாதத்தை பொறுத்து **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 11 அயலிடைவாதம் (அ) வேற்றிடைவாதம் – ஒருவர் சம்பவத்தின்**

**போது சம்பவ இடத்தில் இல்லை என்றும், நெடுந்தொலைவில் இருந்ததாகவும் நிரூபிக்க வேண்டும் என்றும் கூறுகிறது.** அவ்வாறு எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை பொறுத்து வழக்கின் துவக்க நிலையிலேயே முன்வைத்திருக்க வேண்டும் அல்லது வழக்கு விசாரணையின் போதாவது உரிய ஆள் மற்றும் ஆவணச்சாட்சியுடன் மறுத்திருக்க வேண்டும். அவ்வாறு எதிரி தரப்பில் முன்வைத்த வாதங்களை எதிரி தரப்பில் உரிய வகையில் நிருபிக்க தவறி விட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. மேற்கண்டவாறு, அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களை சான்றாவணங்களையும் வைத்து பார்க்கும் போது கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியைபோல் அ.சா 1 இரு சக்கர வாகனத்தில் அ.சா 3 சுப்ரமணியின் த/பெ பெத்தன்னன் வீட்டின் அருகே, சென்ற போது பின்னால் இரு சக்கர வாகனத்தில் சென்ற எதிரி கார்த்திக் அ.சா.பொ 1 ஆன வீச்சருவாளை எடுத்து இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி தனது பின் பக்க தலையில் வெட்டியதில் அவருக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்ததில் கால் முட்டியில் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதையும் அந்த காயங்கள் எதிரியால் தான் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், அரசு தரப்பில் போதிய சாட்சி சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. (i) இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளான ச/பி 341 , 294(பி) , இ.த.ச வின் கீழ் குற்றசாட்டுகளை அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்க தவறி விட்டதாக கருதி எதிரியை ச/பி 341 , 294(பி) இதச வின் கீழான குற்றச்சாட்டுகளில் இருந்து குற்றவாளி இல்லை என்று பிரிவு 235 (1) கீழ் விடுதலை செய்தும்,

(ii) **எதிரி மீது சுமத்தப்பட்ட ச/பி 307 இதச வின் கீழான குற்றசாட்டை அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிருபிக்கப்பட்டுள்ளதால், எதிரி ச/பி 307 இதச வின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது . மேற்படி, குற்றத்திற்காக எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து கு.வி.மு.ச பிரிவு**

**235(2) பிரிவின் கீழ் வினவியபோது, அவர் கீழ்கண்டவாறு பதில் அளித்தார் . அதை நீதிமன்றம் பதிவு செய்து கொண்டது.**

**எதிரி அவருக்கு குறைந்த தண்டனை வழங்கவேண்டும் என்று கோரினார் (எதிரியின் ஒப்பம் – கார்த்திக் த/பெ லட்சுமணன்) எதிரியின் கோரிக்கை பதிவு செய்யப்பட்டது.**

29. முடிவாக, **எதிரிக்கு இதச பிரிவான 307 ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும், அபராதம் ரூ.1000/– விதித்தும், கட்டத்தவறினால் 1 மாதம் சாதாரண சிறை தண்டனை விதித்தும், குவிமுச பிரிவு 235(2) ன் கீழ் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.**

30. எதிரி ஏற்கனவே, 13.02.2020 ம் தேதி கைது செய்யப்பட்டு 13.02.2020 ம் தேதி முதல் 04.03.2020 ம் தேதி வரை நீதிமன்ற காவலில் இருந்துள்ளார். அவ்வாறு எதிரி நீதிமன்ற காவலில் இருந்த 21 நாட்களை இவ்வழக்கின் தண்டனை காலத்திலிருந்து கழித்து கொள்ள வேண்டியது என்று கு.வி,.மு.ச. பிரிவு 428 ன் படி உத்தரவிடப்படுகிறது.

**<u>31. வழக்கு சொத்துக்கள் பற்றிய உத்தரவு :</u>**

இந்த வழக்கில் கைப்பற்றி தாக்கல் செய்யப்பட்ட CP.No. 4/2023 Dt: 31.03.2023 ல் கண்ட வழக்கு சொத்துக்களான

1. சுமார் 28 செ.மீ வளைந்த இரும்பாள் ஆன கொடுவாள் ( இரும்பூன் மற்றும் மரக்கைப்பிடி 11 செ.மீ ) இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், அல்லது மேல் முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னரோ அல்லது மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவு படியோ அழிக்கப்பட வேண்டும் என்று கு.வி.மு.ச. பிரிவு 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

2. TN 70 RO200 HERO SPLENDOR என்ற இரு சக்கர வாகனத்தை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர், அல்லது மேல் முறையீடு நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னரோ அல்லது மாண்புமிகு மேல் முறையீட்டு

நீதிமன்ற உத்தரவு படியோ மனு செய்து பெற்று கொள்ள வேண்டியது என்று கு.வி.மு.ச. பிரிவு 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Jayamani Muthu
Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur
Date: 2026.03.12 21:21:23 +0530

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்

<u>அரசுதரப்பு சாட்சிகள்</u>

<u>(முதல் நிலை சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம்)</u> :–

| விசாரணை செய்யப்பட்டவர்களின் பெயர் | | முதல் விசாணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| அ.சா.1. | சீனிவாசன் | 24.01.2024 | 30.01.2025 |
| அ.சா.2. | கேசவமூர்த்தி | 03.04.2025 | 03.04.2025 |
| அ.சா.3. | சுப்பிரமணி | 24.04.2025 | 24.04.2025 |
| அ.சா.4. | முரளி | 24.04.2025 | 24.04.2025 |
| அ.சா.5 | கோவிந்தராஜ் | 24.04.2025 | 24.04.2025 |
| அ.சா.6 | கிருஷ்ணன் | 26.06.2025 | 26.06.2025 |
| அ.சா.7 | பால்ராஜ் | 24.07.2025 | 24.07.2025 |
| அ.சா.8 | செல்வம் | 24.07.2025 | 24.07.2025 |
| அ.சா.9 | சகாதேவன் | 21.08.2025 | 21.08.2025 |
| அ.சா.10 | சக்திவேல் | 18.09.2025 | 18.09.2025 |
| அ.சா.11 | கிருஷ்ணன் | 18.09.2025 | 18.09.2025 |
| அ.சா.12 | ஸ்ரீராமஜெயம் | 25.09.2025 | 25.09.2025 |
| அ.சா.13 | ரவிச்சந்திரன் | 25.09.2025 | 25.09.2025 |
| அ.சா.14 | பூபதிராமராஜ் | 09.10.2025 | 09.10.2025 |
| அ.சா.15 | யுவராஜ் | 16.10.2025 | 16.10.2025 |
| அ.சா.16 | முத்துகிருஷ்ணன் | 27.10.2025 | 27.10.2025 |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.6ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.6ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.6 | காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 |
| அ.சா.ஆ.10 | படிவம் 91 |
| அ.சா.ஆ.11 | எதிரி நீக்கல் அறிக்கை |

**அரசுதரப்பு சான்றுப் பொருள்கள் C.P.No.04/2023 :-**

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 28 செ.மீ. வளைந்த கூர்மையான இரும்பு பகுதியுடன் கூடிய இரும்பு பூண் மற்றும் மரக்கைப்பிடியுடன் சுமார் 11 செ.மீ. நீளம் கொண்ட கொடுவாள் ஒன்று |
| சா.பொ.2 | TN-70-R-0200 Hero Splendor Pro என்ற இருசக்கர வாகனம் ஒன்று |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள் :** - இல்லை

Jayamani Muthu

Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur
Date: 2026.03.12 21:21:33 +0530

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஒசூர்.

<u>குறிப்பு:-</u>

1. வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச.437(ஏ) பிரிவின்கீழான பிணைப்பத்திரத்தைத் தவிர மற்ற பிணைப்பத்திரங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. மூன்று தினங்களுக்கு மேல் எந்த ஒரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை.
5. சொத்துப்பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
6. தீர்ப்புரையின் நகல் கூடுதல் அரசு வழக்குரைஞருக்கு வழங்கப்பட்டது.

Jayamani Muthu

Additiional Sub Judge, Additional Sub Court.
Digitally signed by Jayamani Muthu
Location: Hosur
Date: 2026.03.12 21:21:40 +0530

கூடுதல் சார்பு அமர்வு நீதிபதி,
ஓசூர்.